2003 மார்ச் 25]

அனுப்பவேண்டும். எனது தொகுதியைச் சேர்ந்த பரமத்தி-வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெண்கரை, பாளப்பட்டி, நன்செய்யிடையார், வாளப்பாளையம், அனிச்சம்பாளையம், மற்றும் காவிரியின் இடது கரையிலும், அதேபோல் கரூர் மாவட்டத்திலே வேலாயுதம்பாளையம், புகளூர் மற்றும் நொய்யலில் இருந்து வாங்கல் வரை உள்ள விவசாயப் பகுதிகளிலும் மூன்றில் ஒரு பங்கு விவசாயிகள் வெற்றிலைச் சாகுபடி செய்து வருகின்றார்கள். ஆகவே, ஆயிரக்கணக்கான வெற்றிலை விவசாயிகள் பயன்பெறும் வகையிலே தற்சமயம் சிறுகமணியிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற வெற்றிலை ஆராய்ச்சி மையத்தையே பரமத்தி-வேலூர் பகுதியில் முன்பு செயல்பட்டது போல் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். ஆகவே, இந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இங்கு மாற்றவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலைக்கு அருகில் உள்ள பரமத்தி-வேலூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய நிதி உதவியுடன் வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலையத்திற்குப் போதுமான உள் கட்டமைப்புடைய கட்டட வசதிகள், நிலங்கள் இல்லாத காரணத்தினால் அது சிறுகமணிக்கு மாற்றப்பட்டது. சிறுகமணியில் இருந்து, விவசாயிகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகளை அது செய்து வருகிறது. எந்த ஆராய்ச்சியினுடைய பயனும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் மூலமாகக் கிடைக்கிற காரணத்தினால் தற்போது இருக்கிற நிதிநிலையில் புதிதாக ஒன்று தொடங்குகிற சாத்தியம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

71—

கொள்முதல் நிலையம்

***27645**—**திரு.இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 25

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் முருங்கை விவசாயிகளுக்காக முருங்கைக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் முருங்கைக் கொள்முதல் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இ.ஏ. லியாகுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கை எனது அரவக்குறிச்சி தொகுதியில் அமோக விளைச்சல் இருப்பதால் அதற்குரிய விலை கிடைப்பதில்லை. சுமார் இரண்டு ரூபாய்க்கு 20 முருங்கைக்காய்கள் கொண்ட ஒரு கட்டே விற்கப்படும் நிலை ஏற்படுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. வேளாண் தொழிலைச் சார்ந்த முருங்கைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை எனது தொகுதியில் தொடங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் மற்றும் முருங்கைத் தழையை எல்லோரும் விரும்பி சாப்பிடுகிறோம். அப்படிச் சாப்பிடுகிற நேரத்தில் தோட்டக்கலை மேம்பாடு வாயிலாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற மா, வாழை, முந்திரி, வீரிய ஒட்டு வகை என்று மட்டும் சேர்த்திருக்கிறார்கள். முருங்கைக் காய் வீரிய ஒட்டு வகைதான் என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேகூட ஜட்ரோபா (Jatropha) பாரடைஸ் மாம் இவையெல்லாம் உற்பத்தி செய்து அவற்றை அதிகரிக்க வேண்டுமென்கிற நிலையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில்கூட முருங்கைக் காயை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே, முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு, ஒரு தொழிற்சாலை தமிழகத்திலே ஏற்படுத்தப்படுமா, அமைச்சர் ஏற்படுத்துவாரா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 25]

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் துணைத் தலைவர் முருங்கைக் காய் மேல் ரொம்ப விருப்பமாக இருக்கிறார். (சிரிப்பு) சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காயில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுமா என்று கேட்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்வருவார்களானால் அதை ஏற்றுமதி செய்வதிலே எந்தவிதமான தடங்கலும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஒட்டன்சத்திரம், அரவக்குறிச்சி, வெள்ளக்கோயில் ஆகிய 3 தொகுதிகளிலும் விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்றார்கள். சில நேரங்களில் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அந்த விலை கிடைக்காத நேரத்திலே சேமித்து வைத்து விவசாயிகளுக்கு நல்ல கட்டுப்படியான விலை கிடைக்கின்ற வகையிலே அரசின் சார்பாக இந்த மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய ஒட்டன்சத்திரத்திலே—அங்கே தமிழ்நாட்டிலேயே பெரிய காய்கறி மார்க்கெட் இருக்கிறது—அரசின் சார்பாக குளிர்ச்சாதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

72—

குழந்தை நலக் காப்பகம்

***18646—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?